# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 190/நகராட்சி/2017**
**நாள் : 22/07/2019**

**திரு வ. சின்னப்பன்,**
**5/663, முல்லை நகர்,**
**திருச்சி சாலை,**
**நாமக்கல் – 637 001.** – **முறையீட்டு மனுதாரர்**

1. **திரு பாலசுப்ரமணியன்,**
   **ஆணையாளர்,**
   **நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.**
2. **திரு ந. கமலநாதன்,**
   **பொறியாளர்,**
   **நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.**

– **எதிர் மனுதாரர்கள்**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல், திருச்சி சாலை, முல்லைநகர், 5/663 கதவிலக்க முகவரியில் வசிக்கும் திரு வ. சின்னப்பன் அவர்களின் 03.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.10.2017 அன்று பெறப்பட்டு 190/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், நாமக்கல் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை வாக்குமூலம் மற்றும் சேலம் மண்டல நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிக்கைகள் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், நாமக்கல், திருச்சி சாலை, முல்லைநகர், 5/663 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு வ. சின்னப்பன் என்பவர், தான் தமிழக மின்வாரியத்தில் செயற்பொறியாளராக பணியாற்றி 2004–இல் ஓய்வு பெற்றதாகவும், நாமக்கல் நகராட்சியில் தொடர்ந்து நகராட்சி சட்டத்திற்கு எதிராக பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாகவும் இது குறித்து பலமுறை உயர் அலுவலர்களுக்கு முறையீடு செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டு கீழ்க்காணும் புகார்களை தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்துள்ளார் :-

(1) 2011 முதல் இதுவரை 38–வது வார்டில் உள்ள முல்லை நகர், அன்பு நகர், அழகுநகர் போன்ற குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம், சுகாதாரப் பணிகள் போன்ற பணிகளை நாமக்கல் நகராட்சி செய்வதில்லை எனவும் 2011–இல் நாமக்கல் நகராட்சியுடன் 9 ஊராட்சிப் பகுதிகள் புதியதாக இணைக்கப்பட்டது முதல்

வீட்டுவரி வசூலித்து வரும் நகராட்சி குடிநீர் விநியோகம், சுகாதாரப் பணிகள் போன்றவற்றை முல்லை நகர் நலச் சங்கம், அழகுநகர் நலச் சங்கம், அன்புநகர் நலச்சங்கம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் விடப்பட்டு அவர்கள் மாதந்தோறும் ரூ.350/– கட்டணத்தை வசூலித்து மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றனர் என்றும் 2016–17, 2017–18 ஆகிய ஆண்டுகளுக்கு (6 காலாண்டுகள்) ரூ.1,368/– நகராட்சி நிர்வாகம் கூடுதலாக குடிநீர் வரியாக வசூலித்து வருவதாகவும், ஒரே பணிக்கு இரட்டை கட்டணம் வசூலிக்கும் முறையைத் தவிர்த்து நகராட்சி சட்டவிதிகளின் படி மேற்கண்ட நகர் பகுதிகளுக்கு நகராட்சியே குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும், கடந்த 5 ஆண்டுகளாக குடிநீர் கட்டணம் வசூலிக்காமல் நகராட்சிக்கு சுமார் ரூ.45 இலட்சம் இழப்பு ஏற்படுத்திய எதிர்மனுதாரர்களிடமிருந்து அத்தொகையை வசூலித்து நகராட்சியில் செலுத்த ஆணையிடவும் ;

(2) அழகு நகரில் ரூ.35 லட்சம் செலவில் நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தை அழகு நகர் நலச்சங்கம் இரண்டு பகுதிகளை மாத வாடகைக்கும் ஒரு பகுதியை திருமணம் போன்றவற்றிற்கும் வாடகைக்கு விட்டு வசூலித்து வருவதையும் தடுத்து நகராட்சி நிர்வாகமே மேற்கொள்ளவேண்டும் எனவும், மேற்கண்ட பணிகளை நகராட்சி மேற்கொள்ளாததால் 5 ஆண்டுகளுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகையாக ரூ.15 லட்சத்தை எதிர்மனுதாரர்கள் நகராட்சிக்கு செலுத்த ஆணையிடவும் ;

(3) நகராட்சி சட்டத்திற்கு எதிராக மேற்கண்ட சங்கங்களிடம் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரப் பணிகளை ஒப்படைத்த எதிர்மனுதாரர்களிடம் அபராதமாக ரூ.50/– இலட்சம் வசூலிக்கப்பட ஆணையிடவும் கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து, இம்முறைமன்ற நடுவ 06.10.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நாமக்கல் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்க கோரி ஆணையிடப்பட்டது. மேலும், முறையீட்டு மனுதாரரிடம் 04.04.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலத்தில் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார்களை மீள வலியுறுத்தியதுடன், நகராட்சியிடமிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட 30.08.2017 நாளிட்ட கடித நகல் மற்றும் நலச்சங்கங்களிடம் இருந்து பெறப்பட்ட 26.03.2017 நாளிட்ட அறிவிப்பு நகலையும் சமர்ப்பித்தார். முல்லை நகர் நலச் சங்கத்தாரின் மேற்படி அறிவிப்பில் புகாரில் கூறப்பட்ட அடிப்படைப் பணிகளை மேற்படி நலச் சங்கம் செய்து வருவதாகவும் அதற்காக கட்டணம் வசூலிக்கப்படும் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்த மேற்படி கடிதம்/ அறிவிப்பு நகல்களின் மீது நகராட்சி ஆணையாளர் மற்றும் நாமக்கல் முல்லைநகர் நலச்சங்க தலைவர் ஆகியோரிடம் 05.04.2018 நாளிட்ட இம்முறைமன்ற அறிவிப்பாணை மூலம் விளக்கம் கோரப்பட்டது. மேற்படி நாமக்கல் முல்லை நகர் நலச் சங்கத்தின் தலைவர் திரு P.நடராஜன் அவர்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 17.04.2018 நாளிட்ட கடிதத்தில் 16.04.2018 தேதியில் நடைபெற்ற நாமக்கல் முல்லை நகர் நலச் சங்க செயற்குழுவில், நாமக்கல் நகராட்சி குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகள் மற்றும் நகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் 2018–ஆம் ஆண்டு மே மாதம் 1–ந் தேதி முதல் (01.05.2018) நகராட்சியே செய்ய வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் 01.05.2018 முதல் பராமரிப்புக் கட்டணம் வாங்குவது இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்து அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நாமக்கல் நகராட்சி ஆணையாளரது 08.10.2018 நாளிட்ட அறிக்கை நகராட்சி ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் கீழ்க்காணும் விவரங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன :-

"முல்லை நகர், அழகுநகர், அன்பு நகர் ஆகிய பகுதிகள் நாமக்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 38–வது வார்டுக்குள் அமைந்துள்ளதென்றும், அப்பகுதிகள் அனைத்தும் கொண்டிசெட்டிபட்டி ஊராட்சி பகுதிகளாக இருந்து 21.10.2011 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.22–இன் படி நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளாகும் என்றும், இப்குதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கூட்டுக்குடிநீர் திட்டத்திலிருந்து கிடைக்கும் குடிநீரைக் கொண்டும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதென்றும், கடந்த காலங்களில் (2015–16) ஏற்பட்ட கடும் வறட்சியின் போது ஆழ்குழாய் கிணறுகள், கூட்டுக்குடிநீர் திட்டங்கள் வறண்டு விட்டதாலும் முல்லை நகர் மற்றும் அழகு நகர் தவிர ஏனைய பகுதியான காவேட்டிப்பட்டி, முதலைப்பட்டி, சின்னமுதலைப்பட்டி, மாவட்ட ஆட்சியரகம் மற்றும் தும்மங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு தனித்தனியே GLR புதியதாக கட்டப்பட்டு அதன் மூலம் தண்ணீர் பம்பிங் செய்து விநியோகிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்கண்ட மூன்று நகர் பகுதிகளில் மட்டும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் அமைக்கப்பட்ட நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டிக்கு அப்பகுதி அருகில் செல்லும் நகராட்சியின் பிரதான குழாயிலிருந்து இணைப்பு வழங்கப்பட்டு GLR ல் நிரப்பி ஏற்கனவே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வந்த குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து உரிய சம்மத கடிதம் பெறப்பட்டு குடிநீர் உபவிதிகளின் படி ஒரு இணைப்புக்கு ரூ.3,000/– வீதம் வைப்புத் தொகை வசூல் செய்யப்பட்டு, 2017–18–ஆம் நிதியாண்டு வரை 100 சதவீதம் முறையாக வசூல் செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பகுதியில் மொத்தம் 678 இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு அதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.6,18,336/– வருவாயாக வரப்பெற்றுள்ளது எனவும் மற்ற அடிப்படை பணிகளான தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் சுகாதாரப் பணிகளையும் நகராட்சியே செய்து வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

23.05.1997 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.–1) துறையின் அரசாணை(நிலை) எண்.131–இன் படி நகராட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் கட்டிடங்கள், அலுவலகங்கள் ஆகியவைகளை ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்கலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதன்படி அழகு நகர் சமுதாயநலக்கூடம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் மேற்படி கட்டிடம் ஊராட்சி ஒன்றியமாக இருந்தபோதே கட்டி முடிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றிய வசம் உள்ளது எனவும் இதில் நிதி இழப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது."

5. நாமக்கல் நகராட்சியின் பொறியாளராகவும் நகராட்சி ஆணையாளர் கூடுதல் பொறுப்பிலும் பணியாற்றி வந்த திரு ந. கமலநாதன் அவர்கள் 09.10.2018 அன்று விசாரணையின் போது, புகாரில் குறிப்பிட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் குடிநீர் விநியோகம், சுகாதாரப் பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு ஆகிய பணிகளை சம்பந்தப்பட் பகுதி நலச் சங்கங்கள் பல ஆண்டுகளாக செய்து வந்ததாகவும், 2011–இல் நகராட்சியுடன் அப்பகுதிகள் இணைக்கப்பட்ட பின்னரும் மேற்படி பணிகளை நலச்சங்கங்கள் தொடர்ந்து செய்து வந்ததாகவும், கடும் வறட்சி ஏற்பட்டபோது மேற்படி பகுதிகளுக்கு நகராட்சி பழைய குடிநீர் திட்டத்தின் மூலம் ஏற்கனவே

இருந்த நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் நகராட்சி மூலம் விநியோகிக்கப்பட்டதெனவும் அதனைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் நகராட்சியால் நாளது தேதிவரை வழங்கப்பட்டு வருகிறதெனவும் நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய முன்வைப்புத் தொகையும் பெற்றுக் கொண்டு மாதாந்திர குடிநீர் கட்டணமும் வசூலிக்கப்படுவதாகவும், மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கச் சொல்லி எந்த சங்கத்திற்கும் நகராட்சி அனுமதி வழங்கவில்லை என்றும் அழகு நகர் சமுதாயக்கூட கட்டிடம், கொண்டிசெட்டிபட்டி ஊராட்சியாக இருந்தபோது நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட்டதாகவும் அக்கட்டிடம் ஊராட்சி ஒன்றியத்தால் நகராட்சி வசம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

6. மேலும் 10.10.2018 நாளிட்ட நாமக்கல் நகராட்சி ஆணையாளரது அறிக்கையில் முல்லை நகர், அழகு நகர், அன்பு நகர் ஆகிய பகுதிகளில் வீட்டுவசதி வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வந்த இனங்கள் மற்றும் கொண்டிசெட்டிபட்டி பகுதியில் உள்ள பொது இடங்கள் ஆகியவற்றை ஒப்படைக்கக்கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன எனத் தெரிவித்து கடித நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், **மேற்படி குடியிருப்பு பகுதிகளில் உள்ள மொத்தம் 774 இணைப்புகளுக்கு அக்டோபர் 2016 முதல் வழங்கப்பட்ட குடிநீருக்கு மார்ச் 2018 வரை ரூ.10,13,904/– மாதாந்திர கட்டணமாகவும், வைப்புத் தொகையாக ரூ.23,22,000/–ம் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

7. முறையீட்டு மனுதாரரின் முறையீடு மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவற்றின் மீது தல ஆய்வு செய்து விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு 07.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4)ன் கீழ் ஆணையிடப்பட்டது. 12.07.2019 நாளிட்ட தனது அறிக்கையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையர் தெரிவித்த விவரங்களுடன் கூடுதலாக அழகு நகர் சமுதாயக்கூடத்தை 09.10.2018–ந் தேதி முதல் நகராட்சி நிர்வாகத்தால் கையகப்படுத்திக்கொண்டு 23.11.2018–ந் தேதியன்று பொது ஏலம் நடத்தப்பட்டு **ஆண்டொன்றுக்கு ரூ.2,01,000/–க்கு** உயர் ஏலக் கேள்வி கோரிய ஏலதாரர் வசம் சமுதாயக்கூடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

8. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரது புகார் மற்றும் இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கையின் அடிப்படையில்தான் புகாருக்குட்பட்ட பகுதிகளுக்கான அடிப்படை பணிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கீழ்க்கண்டவாறான வருவாய் இனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| | | வருவாய் <u>ரூபாய்</u> |
|---|---|---|
| 1) | மார்ச் 2018 வரை 774 இணைப்புகளுக்கான மாதாந்திர குடிநீர் கட்டணம் | 10,13,904/– |
| 2) | குடிநீர் வைப்புத் தொகை | 23,22,000/– |
| 3) | அழகுநகர் சமுதாயக்கூடம் ஆண்டு ஒன்றிற்கான பொது ஏலம் (2018–19) | 2,01,000/– |
| | **மொத்தம்** | **35,36,904/–** |

மேலும், முல்லை நகர் நலச் சங்கத்தாரது 17.04.2018 நாளிட்ட கடிதம் மற்றும் அறிக்கைகளின்படி நகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப் படவேண்டிய குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரப் பணிகள் 30.04.2018 வரை நலச் சங்கத்தால் முகவர் போல செய்யப்பட்டுள்ளதும், 01.05.2018 முதலே நகராட்சியின் நேரடி/ முழுப்பொறுப்பில் ஏற்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. எனவே, இந்நேர்வில்,

நகராட்சி செய்யவேண்டிய கடமைகளை மேற்படி நலச்சங்கங்கள் மூலம் செய்ய அனுமதித்து, உரிய கட்டணங்கள் / வைப்புத் தொகைகள் வசூலிக்காமல் இருந்தது மற்றும் நகராட்சி சொத்தான சமுதாயக்கூடத்தை 08.10.2018 வரை கையகப்படுத்தாமல் இருந்தது அனைத்தும் நிர்வாக சீர்கேடாகவே கருதப்படுகிறது. எனவே, மேற்படி நிர்வாகச் சீர்கேட்டிற்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறைரீதியான/ சட்டப்படியான நடவடிக்கை தொடரவும் மற்றும் நிதி இழப்பு ஏதுமிருந்தால் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கவும் பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 – ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு வ. சின்னப்பன்,
   5/663, முல்லை நகர்,
   திருச்சி சாலை,
   நாமக்கல் – 637 001.

2. நகராட்சி ஆணையர்,
   நாமக்கல் நகராட்சி,
   நாமக்கல்.

3. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,
   சேலம்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சாந்தோம் நெடுஞ்சாலை,
   சென்னை – 600 028.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி